DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 09/2025**

Prosecution **PW.6**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.முருகேசன் | கிராமம் : | |
| பெயர் : | துரைபாண்டி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | காவல் ஆய்வாளர் |
| ஜாதி : | | வயது : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026

1 வது எதிரி ஜெயராமனுக்கு தனியாக சிசி 160/2025 என்று வழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்ப்ரன்ஸ் ஆபிஸ் மூலம் தென்காசி காவல் கண்காணிப்பாளர் அலுவகத்தில இருந்து ஆஜரானார் சாட்சியை நோடல் ஆபிசர் தொழில் நுட்ப பிரிவு SI திருமதி.ஜெயசுதா அறிமுகப்படுத்தினார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தென்காசி மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.09.2024 ம் தேதி மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக ரூபிணி இருந்த போது சீத்தாராமன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலையக்குற்ற எண்.319/2024 பிரிவுகள் 304(2) BNS ன்படி வழக்கு பதிவு செய்தார். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. நான் வழக்கு கோப்பினை பெற்று பார்வையிட்டு எனது புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு 09.09.2024 ம்தேதி காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடசாட்சிகள் சிவசுப்பிரமணியன், சுகன்யா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** சாட்சிகள் சீத்தாராமன், ஜானகி, மங்கையர்கரசி, ரவிச்சந்திரன், சுகன்யா, சிவசுப்பிரமணியன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி வந்த நிலையில் 14.11.2024 ம் தேதி 13.30 மணிக்கு போலிஸ் பார்ட்டியுடன் மாயனூர் முடக்குசாலையில் வாகன சோதனை செய்த போது மலைப்பட்டி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நேக்கி TN 63 BQ 8524 என்ற பதிவெண் கொண்ட யமகா வண்டியில் வந்த இருவர் போலிசாரை கண்டவுடன் வாகனத்தை திருப்பி சென்ற போது பிடித்து விசாரித்த போது வாகனத்தை ஓட்டி வந்த ஜெயராமன் என்றும் பின்னால் உட்கார்ந்திருந்தவர் இளையராகவன் என்றும் மேலும் ஜெயராமனை விசாரிக்க அவர் தானாக மூன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மருதை, பெருமாள் முன்னிலையில் பதிவு செய்தேன். (**ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்ப்டட பகுதி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

4. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஜெயராமன் அன்றைய தினமே வலது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 4.090 கிராம் எடை கொண்ட தங்கதாலி–1, தங்ககுண்டு 2.010 கிராம் –2, 4.090 கிராம் எடை கொண்ட வெள்ளை ரோஸ் கலர் கல் பதித்த தோடு 1 ஜோடி, சுமார் 0.930 எடையுள்ள வெள்ளைக்கல் வைத்த மூக்குத்தி –1, பாலீத்தீன் கவர் –1, tn 63BQ 8524 கருப்பு நிற யமகா இருசக்கர வாகனம் ஒன்று மேற்கண்ட சாட்சிகள் மருதை மற்றும் பெருமாள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. மருதை, பெருமாள் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 27.11.2024 அன்று நீதிமன்ற காவலில் இருந்த ஜெராமன் என்ற சந்தோசை எடுத்து விசாரித்த போது தானும், தன் நண்பனும் இருசக்கர வாகனத்தில்சென்று கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக வாக்குமூலம் கொடுத்தாகவும் மேலும் நண்பர் அசோக்கிடமிருந்து TN 40M 8869 என்ற மாருதி சிப்ட் டிசையர் காரில் சென்று நண்பர் அசோக்குமாருக்கு தெரியாமல் வீட்டிலிருந்து எடுத்துசென்று இளையராஜாவுடன் சேர்ந்து

கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சிகள் ராஜேந்திரன், சுப்புராமன் முன்னிலையில் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார்.

5. ராஜேந்திரன், சுப்புராமன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 2ம் எதிரிக்கு அடையாள அணிவகுப்பு நடத்திய குளித்தலை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 திரு. பிரகதீஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.ஆ.13 ஆககுறியீடு செய்யப்படுகிறது.**) அ.சா.2 ஜானகி என்பவரை மறு விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. முதல்தகவல் அறிக்கை பதிவு செயத ரூபிணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்துக்களை படிவம் –95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**படிவம் –95 அ.சா.ஆ.14 ஆககுறியீடு செய்யப்படுகிறது.**) இத்துடன் என் விசாரணையை முடித்து 30.12.2024 அன்று இதச பிரிவுகள் 304(2) BNS ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 6 கி.மீ ஆகும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரம் 09.30 மணி என்றால் சரிதான். 10 மணிநேரம் காலதாமதமாக புகார் இரவு 08.00 மணிக்கு தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள தண்ணீர் பைப் உள்ளதற்கு எந்த அடையாளமும் இல்லை என்றால் பார்வை மகஜரில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை. புகார் கொடுத்த போது ஜானகி அணிந்ததிருந்த நகைகளை போட்டோவில் காட்டினாரா என்றால் காட்டவில்லை.

2. துப்பாடாவில் கையை கட்டி போட்டார்கள் என்று சொல்லியதற்கு அதந்த துப்பட்டாவை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான் என்ன நிறம் என்று சொல்லவில்லை. வழக்கில் சொல்லப்பட்டு நகைகள் மாதிரி கடையில் சொன்னால் புதியதாக செய்து வாங்கமுடியும் என்றால் சரியல்ல. கைப்பற்ற

நகைகள் பற்றி 2 மாதம் கழித்து தான் கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அந்த நகைகள் டேமேஜ் ஆகியிருந்ததா என்றால் இல்லை.

3. சம்பவ நடந்த நாளில் அதற்கு முன்பே பின்பே அந்த பக்கம் காரில் வந்ததாக யாரும் பார்த்தாகவும் சாட்சிகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் CCTV கேமராவை ஆய்வு செய்தோம் அந்த பகுதியில் கேமரா இல்லை. நாங்கள் CCTV கேமராவை ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரை உள்ளவர்கள் அனைவரும் மேலப்பண்ணைக் களத்தை சேர்ந்தவர்கள் உறவினர்கள் என்றால் சரியல்ல.

4. 14.11.2024 ம் தேதியில் முடக்குசாலையில் வாகன சோதனை செய்ததற்கு எந்த ஆய்வறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தனி அறிக்கை தாக்கல் செய்யவில்லை. நாங்கள் எத்தனை மணிக்கு வாகன சோதனைக்கு சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தனி அறிக்கை கொடுக்கவில்லை. அன்றைய தேதியில் நாங்கள் வாகன சோதனை நடத்தவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் காரில் வந்ததாக சொல்லப்படுவதற்கு காரின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. அடையாள அணிவகுப்பில் அ.சா.2 ஜானகி 2ம் எதிரியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பிற்கு முன்பாக எதிரியின் புகைப்படத்தை காட்டி அடையாளம் காட்டுமாறு கட்டாயப் படுத்தினேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 14.11.2024 ம் தேதி இந்த வழக்கு சாட்சிகள் அனைவரும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.1 கொடுத்த வாக்குமூலத்திற்கு ஏற்றாற் போல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த எதிரிகள் மீது புள்ளிவிவரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் வழக்கிற்கு ஆதரவாக தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு வீடியோ கான்பிரன்சில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு e-mail மூலம் அனுப்பப்பட்டு கையெழுத்து செய்தார்

ஒம்/-திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.